
AHMADI TAMIL CONGREGATION
ST.PAUL'S CHURCH
KUWAIT
அஹமதி தமிழ் திருச்சபை
PREPARE TO MEET GOD
பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்
அஹமதி தமிழ் திருச்சபை
சோதனையைச்
சகிக்கிற
மனுஷன்
பாக்கியவான்;....
யாக் 1:12
செய்தி மலர்
2021
ஜூலை
இதழ் : 3
மலர் : 18



# சபை ஊழியரின் அன்பு மடல்



இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சபையார் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். இந்த பேரிடர் காலத்திலும் கர்த்தர் நம் சபையின் ஒவ்வொரு குடும்பத்தையும் தனிப்பட்ட யாவரையும் விசேஷமாக சிறு பிள்ளைகளையும் கர்த்தர் தாமே கிருபையால் காத்து வருகின்ற தயவை நினைத்து தனிப்பட்ட விதத்திலும் செயற்குழுவினர் சார்பிலும் ஸ்தோத்தரிக்கின்றேன்.

வருகின்ற மாதம் முதல் புதியதாக பொறுப்பெடுக்க இருக்கின்ற ஊழியப் பொருப்பாளர்களுக்காக ஜெபித்துக்கொள்ளலாம். அழைக்கப்பட்ட அழைப்பிற்கு பாத்திரவான்களாக இருந்து ஊழியம் கொள்ளாமல், ஊழியம் செய்யும்படியாக ஜெபத்துடனும், கர்த்தரின் வழிகாட்டுதல் படியும் சபையில் ஊழியங்களை மேற்கொள்ளப் போவதற்காகவும் தடைபட்டிருக்கின்ற ஊழியங்கள் அனைத்தையும் திரும்ப ஆரம்பிக்கப் போகின்றதற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திர பலிகளை செலுத்துவோம். சோதனைகளை சகிக்கிற மனுஷன் பாக்கியவான். (யாக்–1:12) சோதனைகள் வந்து நம்முடைய அநுதின ஜீவியத்தையும் ஜெப வாழ்க்கையையும் தேவனோடு இருக்கிற ஐக்கியத்தையும் பாதிக்கலாம். வெறும் மன அழுத்தத்தையும் பிசாசானவன் கொண்டு வரலாம்.

" மன அழுத்தத்தை மேற்கொள்வது" அவசியம் எப்படி பரிசுத்தர் பவுலின் வார்த்தைகளை நினைவு கூறுவோம். "நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப் போகிறதில்லை. கலக்கமடைந்தும் மனமுறிவு அடைகிறது இல்லை. துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை. கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை"( 2–கொரி–4:8,9)

## OVER THINKING IS THE BIGGEST CAUSE OF UN HAPPINESS

பிரியமானவர்களே, நம்முடைய துக்கங்களையும், பாரங்களையும் சுமக்கிற ஒருவர் இருக்கிறார். தாயினும் மேலாய் நம்மை ஆற்றித் தேற்றுகிறவர் நம் இயேசு.

 வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் (மத்-11:28) என்று இயேசு நம் இருதயத்தின் காயங்களை கட்டுவாராக. 1-கொரி-10:13-ல் சொல்லியிருக்கிறபடி அவர் நம்மை நம்முடைய திராணிக்கு மேலாக சோதிக்க மாட்டார். அந்த சோதனையை தாங்கும் மனநிலையை நமக்கு கொடுத்து அதிலிருந்து விடுபடும்படியான வழியையும் சூழ்நிலைகளையும் ஏற்படுத்தி நல்வழியிலே சமாதானத்தோடு நடத்த வல்ல தேவனையே நாம் எப்பொழுதும் பிடித்துக்கொள்வோம்.

நம்முடைய மன அழுத்தத்திலிருந்து விடுதலை பெற உலகத்தார் அநேக பொழுது போக்குகளில் ஈடுபடுவார்கள். உதாரணமாக விளையாட்டு, வீட்டு விலங்குகளை வளர்த்தல், சுற்றுலா சென்று அமைதியாக இயற்கையை ரசிப்பார்கள். ஆனால் கர்த்தரையே தம் சொந்த தெய்வமாக கொண்டிருக்கிற நாம் அவர் சமூகத்தையே நாடி வந்து ஆறுதலடைகிறோம். தெய்வீக சமாதானம் பெறுகிறோம். தாவீது சொல்வது போல " ஆயிரம் நாளைப் பார்க்கிலும் உமது பிரகாரங்களில் செல்லும் ஒரே நாள் நல்லது. ஆகாமிய கூடாரங்களில் வாசம் செய்வதைப் பார்க்கிலும் தேவனுடைய ஆலயத்தில் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்து கொள்ளுவேன் (சங்கீ-84:10)

கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தை கொண்டு வரும். நீதிமானை ஒருபோதும் தள்ளாட விட மாட்டார். அவர் நம்மை விசாரிக்கிறவர் நம்முடைய கவலைகளை மன அழுத்தத்தை அவரிடம் கொண்டு செல்வோம் ஜெபத்தினாலும், ஸ்தோத்திரத்தினாலும்.

உலகமும், உலகத்தின் காரியங்களும் நம்மைக் கீழே தள்ளி விசுவாசத்தை குறைக்க நினைக்கலாம். பவுலின் வார்த்தைகள்தான் நம்மைத் தேற்றும். கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை. தீயையும், தண்ணீரையும் கடந்து செழிப்பான இடத்தில் நம்மை கொண்டு சேர்ப்பார். நாம் தள்ளப்பட்ட கல்லைப் போல தெரியலாம். ஆனால் நம்மைக்கொண்டு நம் தேவன் ஒரு சபையைக்கட்டுவார். ஊழியத்தை செய்ய வைப்பார். அநேகருக்கு ஆறுதல் சொல்லுகிறவர்களாய், ஜெபிப்பவர்களாய் ஆசீர்வாதத்தை கொண்டு வருகிறவர்களாக வைப்பார்.

சூழ்நிலைகளை பார்க்க வேண்டாம். கர்த்தர் தாமே நம்மையும், நம் சபையையும், தூரத்திலிருக்கும் நம் குடும்பங்களையும், பெற்றோரையும், பிள்ளைகளையும் பாதுகாத்து நடத்துவார். எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாக இருக்க கர்த்தர் கிருபை செய்வார்.

**SOMEDAY YOUR PAIN WILL BECOME THE SOURCE OF YOUR STRENGTH”**

**வருகின்ற மாதத்தின் எல்லா ஊழியங்கள், ஜெபக்கூடுகைகள், ஆராதனைகளுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள். எல்லா சமாதானத்திற்கும் மேலான தெய்வீக சமாதானம் நம் யாவரோடும் இருப்பதாக ஆமென்.**

**கர்த்தரின் பணியில்,**
**உங்கள் அன்பு சகோதரன்**
**S.ஜெயசேகர்**

(14 ஆம பக்கத்தின் தொடர்ச்சி)

இந்த மையத்தில் ஒரு மருத்துவப் பயிற்சிக் கல்லூரி அருட்பணி மருத்துவர்கள் வந்து செல்ல ஒரு விமான ஓடுபாதை மற்றும் வடகிழக்கு காங்கோ காட்டுப் பகதியில் நான்கு சிறு மருத்துவமனைகள் ஆகியவற்றை அமைத்தார். பத்தாண்டுக்குள்ளாக ஹெலனின் 24 ஆண்டு காலக் கனவுகள் நிறைவேறும்படி தேவன் கிருபை செய்தார். நாடெங்கும் ஒன்றோடொன்று தொடர்புகொண்ட சிறு மருத்துவமனைகள் நிறுவப்பட்டன. இரண்டு ஆண்டுகள் கழித்து டாக்டர் ஹெலன் தனது 48–வது வயதில் காங்கோ நாட்டிலிருந்து விடைபெற்றார். காங்கோ நாட்டைவிட்டு வந்த போதிலும் ஹெலன் தனது அருட்பணி ஊழியத்தைக் கைவிடவில்லை. உலக அருட்பணி அமைப்பின் பிரதிநிதியாக உலகெங்கும் சென்று விசுவாசமுள்ள வாலிபர்களும், இளம்பெண்களும் அருட்பணி செய்ய முன் வரவேண்டுமென்று அறைகூவல் விடுத்து வருகிறார். சுவிசேஷத்தை மற்றவர்களும அறியச் செய்வதற்காகவே நாம் இந்தக் குறுகிய கால வாழ்க்கையைப் பெற்றுள்ளோம் என்பதே அவரது அறைகூவல்.

கர்த்தரின் பணியில்
சுகுமார்.

*நீ வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் இடங்கொண்டு பெருகுவாய்;*

*ஏசாயா 54:3*

## நாமே முதற்பலன்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே, இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள்.

அப்போஸ்தலனாகிய யாக்கோபு சொல்கிறார் "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது. அவரிடத்தில் யாதொரு மாறுதலும், யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை. அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மை சத்திய வசனத்தினாலே ஜநிப்பித்தார்" (யாக்–1:17,18)

### 1. நன்மையான ஈவுகள்

நம்முடைய தேவன் பூரண சற்குணராயிருக்கிறார். நல்லோர் மேலும் பொல்லோர் மேலும் சூரியனை உதிக்கப்பண்ணி மழையையும் பெய்யப்பண்ணுகிறார். (மத்–5:48)

இயேசுவும் கூட இந்த உலகத்தில் வாழ்ந்த பொழுது நன்மை செய்கிறவராகவும், பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார். (அப்–10:38)

இயேசுவைப் போல அவரைப்பின்பற்றின அன்பின் சீடனாகிய யோவானும் கூட கீழ்க்கண்ட ஜெபத்தை செய்கிறான்.

பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன். (3–யோவா–2)

உண்மையாய் நாம் ஆண்டவரைப் பின் பற்றும் போது ஆவியின் ஒன்பது கனியாகிய அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் ஆகிய நற்குணங்கள் நம்மில் உருவாகிறது. இதுதான் தேவனுடைய ஈவு. (கலா–5:22,23) அதைத் தொடர்ந்து கீழ்வரும் ஆவியின் ஒன்பது வரங்கள் சோதிகளின் பிதாவினடத்திலிருந்து இறங்கி வருகிறது. ஞானத்தை போதிக்கும் வசனம், அறிவை உணர்த்தும் வசனம், விசுவாசம், குணமாக்கும் வரங்கள், அற்புதங்களை செய்யும் சக்தி, தீர்க்கதரிசனங்களை உரைத்தல், ஆவிகளை பகுத்தறிதல், பற்பல பாஷைகளை பேசுதல், பாஷைகளை வியாக்கினம் பண்ணுதல் ஆகியவைகளே.

இப்படி ஆவியின் கனியும், வரங்களும் இணைந்து செயல்படுகின்ற பொழுது நாம் வல்லமையாய் ஆண்டவருக்கு ஊழியம் செய்து கனியுள்ள வாழ்க்கை வாழமுடியும். இதைத்தான் ஆண்டவர் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். கனியற்ற வரங்கள் வீணானதே. ஆகவே கனியும் வரங்களும் இணைந்தே செயல்படவேண்டும்.

### 2.பாரபட்சமற்ற அன்பு..

இயேசு சொல்கிறார் "உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தை கேட்கிற தன் மகனுக்கு கல்லை கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்கு பாம்பை கொடுப்பானா? ஆகையால் பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளை கொடுக்க அறிந்திருக்கும் போது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளை கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? (மத்–7:9–11)

இப்படி ஒரு தகப்பனுடைய அன்பைப் போலவே கர்த்தரும் நம்மிடத்தில் பாரபட்சமற்ற அன்பைக் காண்பிக்கிறார். ஆவலோடு ஆண்டவரிடம் வந்து செய்த தவறுகளுக்கு மன்னிப்பு கேட்கின்றபொழுது நமக்கு அவர் மன்னிக்கின்றார். மனந்திரும்புகிற ஒரே பாவியின் நிமித்தம் பரலோக ராஜ்ஜியத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார். (மத்–) எந்த தகப்பனும் தன் மகன் கெட்டுப்போவதை விரும்புவதில்லை. அதைப்போல மகன் தவறு செய்கின்ற பொழுது அதற்காக அவனை வெறுத்து விடுவதுமில்லை. எப்படியும் மனந்திரும்புவான் என்று சொல்லி தன் மகனுக்காக காத்திருக்கிறான். "

"இஸ்ரேல் இளைஞனாயிருந்தபோது நான் அவனை நேசித்தேன். எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன். அவர்கள் தங்களை அழைக்கிறவர்களின் முகத்துக்கு விலகி போய்விட்டார்கள். பாகால்களுக்கு பலியிட்டு விக்கிரங்களுக்கு தூபம் காட்டினார்கள். நான் எப்பிராயிமை கைபிடித்து நடக்க பழக்கினேன். ஆனாலும் நான் தங்களை குணமாக்குகிறவர் என்று அறியாமற் போனார்கள். மனுஷரைக் கட்டியிழுக்கிற அன்பின் கயிறுகளால் நான் அவர்களை இழுத்தேன். அவர்கள் கழுத்துகளின் மேலிருந்த நுகத்தடியை எடுத்துப் போடுகிறவரைப் போலிருந்து அவர்கள் பட்சம் சாய்ந்து அவர்களுக்கு ஆகாரம் கொடுத்தேன்" (ஓசியா–11:1–4)

இப்படி எல்லோரையும் இரட்சித்து, பரிசுத்தப்படுத்தி, பாரபட்சமில்லாமல் மகனாக மகளாக ஏற்றுக்கொண்டு பரிசுத்த ஆவியை அருளி எல்லோரையும் ஊழியக்காரர்களாய், ஊழியக்காரிகளாய் மாற்றுவதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அதற்கு பின்பு "நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் அப்பொழுது உங்கள் குமாரரும், உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள். உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்" (யோவே–2:28,29)அல்லேலூயா.

## 3.சத்திய வசனத்தினாலே ஜனனம்..

ஆண்டவர் தமது சிருஷ்டிகளில் எல்லாவற்றிலும் நம்மை விசேஷமாக பிரித்தெடுத்து ஜீவ வசனங்களை கொடுத்து நம்முடைய ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறார். அநேக அடைக்கலாம் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாய் இருக்கிறீர்கள் என்று ஆண்டவர் கூறுகிறார். வேத

வசனங்சகளை நாம் வாசிக்க, வாசிக்க நம் கண்கள் தெளிவடைகிறது. "கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும் பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும் இருதயத்தை சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய கற்பனை தூய்மையும் கண்களை தெளிவிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருக்கு பயப்படுகிற பயமும் சுத்தமும் என்றைக்கும் நிலைக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய நியாயங்கள் உண்மையும் அவைகள் அனைத்தும் நீதியுமாயிருக்கிறது. அவைகள் பொன்னிலும் மிகுந்த பசும்பொன்னிலும் விரும்படத்தக்கதும் தேனிலும் தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாயிருக்கிறது. அன்றியும் அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன். அவைகளை கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலனுண்டு" (சங்கீ–19:7–11)

இப்படி வார்த்தையாகிய கர்த்தர் அனுதினமும் வேத வசனங்கள் மூலம் நம்மோடு பேசுகிறார். ஆலோசனைகளைத் தருகிறார். எந்தப் பாதையில் நாம் நடக்க வேண்டுமென்று சொல்லி வெளிச்சம் காண்பிக்கிறார். சத்தியத்தின் பாதையில் நம்மை நடத்துகிறார். புல்லுள்ள இடங்களில் மேய்த்து அமர்ந்த தண்ணீர்களன்டையில் கொண்டு செல்கிறார். நம் ஆத்துமாவை தேற்றுகிறார். நமக்கு பலன் தருகிறார். நம் கண்ணீரைத் துடைக்கிறார். நம்மை தைரியப்படுத்துகிறார். நம்மை பலப்படுத்துகிறார். ஆத்தும பாரத்தை நீக்குகிறார். தெய்வீக சமாதானத்தைத் தருகிறார். நோய் நொடிகளை குணமாக்குகிறார். திருப்தி படுத்துகிறார். பரலோக சந்தோஷத்தை தருகிறார். வெற்றியைக் கொடுக்கிறார். பிசாசை எதிர்கொண்டு ஜெயிக்க பலன் தருகிறார். வல்லமையாய் ஊழியங்களை செய்ய வைக்கிறார். இந்த உலகத்தில் வெற்றியுள்ள வாழ்க்கை வாழச்செய்து பலலோக ராஜ்ஜியத்தையும் பரிசளிக்கிறார். எவ்வளவு நல்லக் கடவுள் நம் வாழ்நாள் முழுவதும் துணை நிற்கிறார் பாருங்கள். உங்கள் இருதயம் பயப்படாமலும் கலங்காமலும் இருப்பதாக.

கர்த்தர் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து நன்மையான ஈவுகளையும், பூரணமான வரங்களையும் கொடுத்து மாயமற்ற தம் அன்பினால் உங்களை அலங்கரித்து ஜீவனுள்ள சத்திய வசனத்தினாலே உங்களை மறுபடியும் பிறக்க செய்வாராக.

கர்த்தருடைய கிருபை உங்கள் அனைவரோடும் என்றென்றைக்கும் தங்கியிருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்,

அன்பு சகோதரன்.

S.ஸ்டாலின்

(16 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)
3.ஆசையாய் தொடர்கிறேன்..

கிறிஸ்தவ வாழ்வு என்பது அவர் எதை தொடங்கினாரோ அதை தொடர்வதுதான். பொறுமையாகவோ அல்லது அவனவனுக்கு தேவன் கொடுத்த பெலனின் படியோ தொடர வேண்டும். நம் இயேசு கிறிஸ்து சும்மா போகவில்லை என்னிடத்தில் கற்றுக்கொள்ளங்கள் என்று அவருடைய வாழ்க்கையை முன் மாதிரியாக வைத்து போனார். அடிச்சுவட்டை ஏற்படுத்தி தான் போயிருக்கிறார்.

1-பேது-2:21-ல் அதை நம்மால் வாசிக்க முடியும் எப்படி தொடர வேண்டும். நான் ஆசீர்வாதமாய் இருக்கும் போது, உயர்வில் இருக்கும் போது, பெலன் இருக்கும் போது மட்டுமல்ல தாழ்மையிலும், சிறுமையிலும் குறைந்த பெலனிலும் எப்படி இருந்தாலும் மரணமே வந்தாலும் எல்லா சூழ்நிலையிலும் எல்லா காலகட்டத்திலும் ஆசையாய் தொடர வேண்டும் கர்த்தர் அதற்கு கிருபை தருவாராக.

அவர் போன பாதையில் நாமும் ஆசையாய் தொடருவோமேயானால், நம்மைக்கொண்டும் அனேகரை கிறிஸ்துவில் வளர, அவரை ஆசையாய் தொடர நிச்சயமாய் செய்வார். எல்லாவற்றையும் அவரை அறிகின்ற அறிவின் மேன்மைக்காக இழக்கவும், இழந்ததை அவரோடு ஐக்கியமாவதற்கு குப்பையாக எண்ணவும் வேண்டும். அப்போது தேவன் நம்மை முழுமையாய் பொறுப்பேற்று நடத்துவார். நம்மையும் முன்மாதிரியாய் வைப்பார்.

1-கொரி-11:1 பவுல் சொல்கிறார் நான் கிறிஸ்துவை பின்பற்றுவது போல நீங்களும் பின்பற்றுங்கள். நாமும் சுயத்தை வெறுத்து தேவசித்தத்தை செய்யவும், உண்மையுள்ளன் என்று தேவன் கொடுத்த உன்னத அழைப்பில் உறுதியாக இருக்கவும், இயேசு கிறிஸ்துவை போல நாமும் நம்மை தாழ்த்தி தேறினவன் என்று எண்ணாமல் எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவை எடுத்துக்கொண்டு இயேசுவை ஆசையாய் தொடர உண்மையான அர்ப்பணிப்பும், உறுதியான தீர்மானமும் எதையாகிலும் செய்ய வேண்டும் என்ற மன வாஞ்சையும் நம்மிடத்தில் இருக்குமானால் இயேசுவைப் போல அவர் செய்ததையும், ஆதி அப்போஸ்தல சரித்திரத்தில் நடந்த மகிமையான ஊழியத்தை செய்யவும் பரிசுத்த ஆவியினுடைய துனையையும், அபிஷேகத்தின் வல்லமையும, உன்னத பெலனையும் தந்து அவருக்கு பயன்படவும் பிரயோஜனமாக இருக்கவும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நிச்சயம் கிருபை தருவார். இந்த வார்த்தைக்கு அர்ப்பணிப்போம். இயேசுவுக்கே மகிமையுண்டாவதாக. ஆமென்

வாலிபம் இயேசுவுக்கே.

**என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை.** (யோவேல் 2:26)

## 2021 –ஜூன் மாத வேத வினாவுக்கு விடை

1. எலியா – 1 இராஜா 19: 1-3
2. பாகால் தீர்க்கதரிசிகள் – பலிபீடத்திற்கு – 1 இராஜா 18: 26
3. சாலொமோன் – 1 இராஜா 3: 9-14
4. அதோனிராம் – 1 இராஜா 5:13,14
5. அகிஷார் – 1இராஜா 4:6
6. தாபாத் – 1இராஜா 4: 11
7. அசரியா – 1இராஜா 4:2
8. சாலொமோன் – 1 இராஜா 7 : 48
9. எலியா – 1 இராஜா 17 : 6
10. கர்மேல் – 1 இராஜா 18: 20-40
11. நித்திய ஜீவனை பெற விரும்பின வாலிபன், தாவீது – 1 இராஜா 15:5– லூக்கா 18:22
12. அதோனியா, யோவாப் – 1 இராஜா 1:50-53 . 2:28,29
13. ஒபதியா – 1 இராஜா 18:7
14. எலியா – 1 இராஜா 19:4-8
15. சாலொமோன் – 1 இராஜா 7 : 7

### 2021 ஜூன் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்பு குமார்
Sis. மெர்ஸிலின் தயா இயேசுரெத்தினம்
Sis. வனிதா காளிமுத்து
Sis. ஹெலன் ஷீஜா ராபின்
Sis. லதா கிறிஸ்டோபர்
Sis. ஷீபா அருண் இம்மானுவேல்

........உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன்.. *ஆதியாகமம் 12:7*

# ..உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்

... (ஆதி – 16:10)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி.ரெஜினா ராமமூர்த்தி
செல்வன்.ஏனோக் ஜோன் மார்க் அந்தோணி
செல்வன்.ஜோஸப் பிரின்ஸ் பால்ஜெகநாதன்
செல்வி.கீதா மகேஷ்ராஜ்
செல்வன்.டெலின் ஜெர்வின் பிராங்கின்
சகோதரி.பெல்வியா ஜெரின்
செல்வி. அஃபியா ஆரோக்கியதாஸ்
சகோதரி.ஸ்நேகா எபிநேசர்
சகோதரி.அஸ்வினி தினேஷ்
செல்வன்.கிதியோன் ஞானசேகர்
சகோ.ஆல்வின் ஜீலியஸ் தம்புகுமார்
செல்வி.ஜீயோனா ஷேரன் செல்வசிங்
சகோதரி.ஏன்ஜலீனா மணிராஜ்
செல்வன்.ஸப்பரின் தீமோதி சிவகுமார்
சகோதரி. பவானி ஆரோக்கிராஜ்
செல்வன். ஜான் லிவீஸ் ஜான் கெட்சன்
செல்வி. வென்பா ஜாமிஸ் பிரியா ரவி
ஜான்பீட்டர்
சகோ.தாமஸ்
செல்வன்.மோனித் ராஜ் வெங்கடேஷ்

சகோ.தாஸ்
சகோதரி.ஜெபராணி தர்மர்
சகோ.சதீஸ் குமார் எத்திராஜ்
செல்வன்.மெல்வீன் சாம் சாமுவேல் தாசையா
செல்வன்.கிளாட்வீன் சாமுவேல் எட்வீன்
சகோதரி.தேவ சொருபி கமலதாசன்
செல்வி.ஹாணி ஹார்ஸிதா வெங்கடேஷ்
சகோதரி.ரோஸ்லின் மேரி பால்ராஜ்
சகோ.ஸ்டாலின்
சகோ.சாந்தியா கட்டீஸ்
சகோ.வின்சென்ட் ஸ்வீட்
செல்வி.லீனா வில்கின்ஸ்
செல்வன். ஜேடன் டினோ பிராங்ளின்
செல்வன். ஜோகன் டினோ பிராங்ளின்
சகோதரி.சாந்தி ஜெயசேகர்
சகோதரி.ஹெப்ஸிபா பாமா சாம் ஆனந்த்
சகோ.அசோக் குமார்
செல்வன். சைமன் ஜெய்குமார்
சகோ.ஸ்டீபஃன் ஜெயகுமார்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்(ஆதி .22:18)

திருமதி & திரு. பக்தராஜ்
திருமதி & திரு.அசோக்குமார்
திருமதி & திரு.ஜோன்செல்வசிங்

திருமதி & திரு.சதீஸ் குமார்
திருமதி & திரு.ஜெஸ்டின்
திருமதி & திரு.வர்கீஸ்
திருமதி & திரு. ரிச்சர்ட்சன் டேனியல்

# 2021 ஜூலை மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 6:30 முதல் இரவு 8:00வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 04/07/2021 | சகோ. ஃபிராங்ளின்(NBTC) | சகோ. ரவிஜான் பீட்டர் |
| 11/7/2021 | சகோ. டேவிட் ஜெயகுமார் | சகோ.அசோக்குமார் |
| 18/07/2021 | சகோ. ஜான் கெட்சன் | சகோ.சாம் ஆனந்த் |
| 25/07/2021 | சகோ. தாமஸ் | சகோ. ஃபிராங்ளின்(MOH) |

## வெள்ளி ஆராதனை நேரம் காலை 10 முதல் 12 வரை மாலை 3:00 முதல் 5:00

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 02/07/2021 | சகோ.பிரசாத் | சகோ. ஐசக் துரை |
| 09/07/2021 | சகோ. எபிநேசர் | சகோ. ஆரோக்கிதாஸ் |
| 16/07/2021 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 23/07/2021 | சகோ. ஆரோக்கியராஜ் | சகோ. இயேசு ரெத்தினம் |
| 30/07/2021 | சகோ. பால் ஜெகநாதன் | சகோ. சாமுவேல் தாசையா |

**08/07/2021 அன்று முழு இரவு ஜெபம்**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு நேரம் – இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணிவரை

**24/07/2021 அன்று சகோதரிகள் ஐக்கிய கூடுகை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு நேரம் – மாலை 6:00 முதல் இரவு 8:30 மணிவரை

**30/07/2021 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு நேரம் – பின்னர் அறிவிக்கப்படும்

15 வயதிற்கு கீழுள்ள சபையின் பிள்ளைகளுக்கு நமது சபை வீட்டில் வைத்து அனைத்து வெள்ளிகிழமைகளிலும் காலை 10 மணி முதல் மதியம் 12 மணி வரை ஆராதணை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது பெற்றோர்களுடன் ஆராதணையில் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தை பெற்று செல்லவும், ஞாயிறு ஆராதணை தற்சமயம் சபை வீட்டில் வைத்த மாலை 6:30 :மணி முதல் 8:00 மணி வரை நடைபெறுகிறது செவ்வாய் கிழமைகளில் குடும்ப ஆசீர்வாத ஜெபம் மாலை 6:30 மணி முதல் 8:00 மணி வரை நடைபெறுகிறது அனைவரும் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தை பெற்றுச் செல்லவும் ( சபையின் அனைத்து ஆராதணையிலும் தவறாமல் கலந்து கொள்ளவும்)

# 2021 ஜுலை மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**

1. திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன் என்று தேவன் எந்த சபைக்கு கூறுகிறார்?
2. தள்ளப்பட்ட பெரிய வலுசர்ப்பத்தின் பெயர் என்ன?
3. எதனால் தேவாலயம் நிறைந்தது?
4. எதன் உருவம் யுத்தத்திற்கு ஆயத்தம் பண்ணப்பட்ட குதிரைகளுக்கு ஒப்பாய் இருந்தது?
5. நகரத்து மதிலின் 12 அஸ்திபாரங்களும் எவ்வித இரத்தினங்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தன?
6. சமுத்திரத்திலிருந்து எழும்பி வந்த மிருகத்தை வணங்கியவர்கள் யார்?
7. யோவான் எதற்காக மிகவும் அழுதார்?
8. பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டபோது அங்கு காணப்பட்டது என்ன?
9. சிவப்பு நிறமுள்ள மிருகத்தின் மேல் ஏறியிருந்த ஸ்திரீயின் நெற்றியில் எழுதியிருந்த நாமம் என்ன?
10. இஸ்ரவேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலும் முத்திரை போடப்பட்டவர்களின் தொகை எவ்வளவு?
11. அக்கினிக் கடலில் தள்ளப்பட்டவை எவை?
12. யோவான் சிறு புஸ்தகத்தை தூதனுடைய கையிலிருந்து வாங்கி புசித்தபோது அது எப்படி இருந்தது?
13. ஆட்டுக்குட்டியானவரும் அவரோடே கூட பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்தவர்களும் எந்த மலையின் மேல் நின்றார்கள்?
14. மங்கின நிறமுள்ள குதிரையின் மேல் ஏறியிருந்தவனுக்கு என்ன பெயர்? அவன் பின் சென்றது என்ன?
15. யேசபேலுடைய வேசித்தன ஆவி உள்ள சபை எது?

**விடைகளை வருகின்ற 20-07-2021க்குள்(whatsApps #66015503) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில் வெளிபடுத்தின விசேஷம் புத்தகத்தில் இருந்து பதிலை கண்டுபிடிக்கவும்**

– – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; –மத்தேயு 7:7

# மிஷனரி செய்திகள்

## ஹெலன் ரோஸ்வியர் (1925)

ஹெலன் ரோஸ்வியர் 1925-ம் ஆண்டு ஹெர்ட்போர்ட்வியரில் ஹெஸ்லிபரி என்ற இடத்தில் பிறந்தார். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் படித்து வந்தபோது, மெய்யான விசுவாசம் கொண்ட சில மாணவிகளின் அற்புதமான சாட்சியின் வாழ்க்கை இவரைச் சிந்திக்கும்படி செய்தது. இருபது வயதான இவர் தனது போலியான வாழ்க்கையை எண்ணிப் பார்த்து மனம் கலங்கினார். தானும் மெய்யான சமாதானத்தைப் பெற வேண்டுமென்ற வாஞ்சையால், கிறிஸ்துமஸ் விடுமுறையின் போது, வேறெதிலும் அதிகக் கவனம் செலுத்தாது ஒவ்வொரு நாளும் வேதாகமத்தைக் கவனமாகப் படிக்கத் துவங்கினார்.

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும் என்ற வசனம் அவரது இருதயத்தைத் தொட்டது. இவர் மனந்திரும்பி தனது மாய்மாலமான வாழ்க்கையை அறிக்கையிட்டு கிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஹெலன் காலப்போக்கில் தான் ஒரு மிஷனெரி ஆக வேண்டுமென்ற வாஞ்சையைப் பெற்றார். ஹெலன் தனது மிஷனெரி பாரத்தை தன் தகப்பனாரிடம் தெரிவித்தபோது அவர் அதிர்ச்சியடைந்தார். தன்னுடைய மகள் ஒரு மருத்துவராக வேண்டும் என்பதே அவருடைய விருப்பமாக இருந்தது. தந்தையின் விருப்பத்தைத் தட்டிக்கழிக்க ஹெலன் விரும்பவில்லை. எனவே அவர் மருத்துவ அருட்பணியாளராக ஆண்டவருக்கு ஊழியம் செய்ய வேண்டுமென்று தீர்மானித்தார். ஜெபத்தில் காத்திருந்த அவர் அதுவே தன்னைக் குறித்த தேவனுடைய சித்தம் என்பதைத் திட்டமாக உணர்ந்தார். நியூ ஹாம் கல்லூரியில் படித்து, 1951-ம்ஆண்டு தனது 21-ம் வயதில் மருத்துவத்தில் பட்டம் பெற்றார். உடனடியாக ஆப்பிரிக்க அருட்பணி மையத்துக்கு விண்ணப்பம் அனுப்பினார்.

ஆப்பிரிக்க அருட்பணி மையம் இவரை காங்கோ நாட்டில் இபாம்பி என்ற இடத்துக்குச் செல்லும்படி சொன்னது. முன்பின் தெரியாத இடமாயிற்றே அவர்களது மொழி தெரியாதே என்றெல்லாம் எண்ணித் தயங்காமால், தன்னை முழுவதுமாகத் தேவனுடைய கரங்களில் ஒப்புக் கொடுத்து விசுவாசத்தோடு புறப்பட்டார். தனது 28-வது வயதில் ஆப்பிரிக்கா சென்ற டாக்டர் ஹெலன் இபாம்பியில் ஒரு சிறிய மருத்துவமனையைத் துவக்கினார். அவருக்கு உதவியாக ஒருவருமேயில்லை. மொழிப் பிரச்சனையும் அவருக்குப் பெரிய இடையூறாக இருந்தது. போதுமான மருந்துகளும் கிடைக்கவில்லை. இவ்வளவு பிரச்சனைகளும் அவருடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு தூண்டுகோலாக அமைந்துவிட்டன. ஹெலன் இன்னும் அதிகமாகத் தேவனைச் சார்ந்து செயல்படத் துவங்கினார். தன்னிடம் சிகிச்சைக்காக வந்தவர்களிடம் கிறிஸ்துவைப் பற்றியும் அவர் அருளும் ஆவிக்குரிய குணமாகுதலைப் பற்றியும்

ஜெபத்தோடு எடுத்துக்கூறினார். அதுவரை நற்செய்தியைக் கேள்விப்பட்டிராத பலர் கிறிஸ்துவை அறிந்துகொள்ள தேவன் கிருபை செய்தார். 16 வயதான ஜாண் மங்காடிமா மூலம் தாய்மொழியாகிய ஸ்வாஹிலி மொழியை கற்றுக்கொண்டார். உள்ளூர் மொழியை நன்றாகப் பேசக்கற்றுக்கொண்ட ஹெலன் பயிற்சி பெற்ற உள்ளூர்வாசிகளின் துணையோடு 2 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவமனையையும் கட்டி முடித்தார். வசதியற்ற காட்டின் நடுவே 5 துணை செவிலியர்களுடன் அமைக்கப்பட்ட இந்த மருத்துவமனை ஒரு பெரிய சாதனையே. ஹெலன் மேற்படிப்பிற்காக இங்கிலாந்து சென்றார்.

சரீரப்பிரகாரமாகவும், ஆவிக்குரிய ரீதியாகவும் புத்துணர்வைப் பெற்றிருந்த டாக்டர் ஹெலன் 1960–ம் ஆண்டில் ஆப்பிரிக்கா திரும்ப எண்ணியபோது காங்கோ நாட்டின் நிலைமை மிகவும் மோசமாகிவிட்டிருந்தது. நீண்ட காலமாக பெல்ஜியம் நாட்டுக்கு அடிமைப்பட்டுக்கிடந்த காங்கோ மக்கள் தங்கள் விடுதலையை எதிர்பார்த்துக் காத்திருந்த வேளை அது.

காங்கோ நாட்டில் ஏற்பட்ட கலகங்களுக்கும் வன்முறைகளுக்கும் தப்பி பிழைக்கும்படி வெள்ளைக்காரர்கள் நாட்டை விட்டு வேகமாக வெளியேறிக் கொண்டிருந்தார்கள். இப்படிப்பட்ட வேளையிலும் துணிவோடு அந்த நாட்டுக்குச் சென்றார். 3 வாரத்துக்குள் உள்நாட்டுபோர் காங்கோவில் துவங்கியது. மிஷனெரி பணித்தளங்கள் மூடப்பட்டன. மிஷனெரிகளைத் திரும்பி வரும்படி அருட்பணி மையங்கள் கட்டளையிட்டன. ஆனால் ஹெலன் திரும்பிச் செல்ல மறுத்துவிட்டார். அடுத்த நான்கு ஆண்டுகள் புரட்சி படை வீரர்களின் பல சித்திரவதைகளை விசுவாசத்தோடு சகித்துக்கொண்டார். இவர் தாக்கப்பட்டார், அடிக்கப்பட்டார், அவமானப்படுத்தப்பட்டார். இறுதியாக சிம்பா படைவீரர்களால் கைது செய்யப்பட்டார். ஐந்து மாதங்கள் ஹெலன் சிறை வைக்கப்பட்டார். சிறையிலும் கிறிஸ்துவைப் பற்றி கூறி, தன்னுடைய சமாதானத்தை அவர்களோடு பகிர்ந்து கொண்டார். தன்னைப் பிடித்துச் சித்திரவதை செய்தவர்களின் மொழியை ஹெலன் அறிந்திருந்தபடியால், அவர்களிடம் கிறிஸ்துவைப் பற்றித் துணிவோடு எடுத்துக் கூறினார்.

1964–ம் ஆண்டு இறுதியில் சர்வ தேசப்படையினர் ஹெலனை சிறையிலிருந்து விடுவித்தனர். புத்தாண்டு தினத்தன்று ஹெலன் விமானம் மூலம் இங்கிலாந்து திரும்பி வந்தார். ஹெலன் உருவாக்கின மருத்துவமனை மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது என்றும் கவனிப்பாரில்லாமல் நோயாளிகள் தவிக்கிறார்கள் என்றும் உருக்கமான கடிதமொன்றை ஜாண் மங்காடிமா எழுதி அனுப்பியிருந்தார். கடிதத்தைப் படித்த ஹெலன் அங்கே திரும்பிச் சென்று நிலைமையைச் சீர் செய்ய வேண்டும் என்ற பாரத்தைப் பெற்றார். தன்னை விசுவாசத்தில் பலப்படுத்தும்படி ஹெலன் தேவனுடைய உதவியை நாடினார். தனது 41–வது வயதில் 1966–ம் ஆண்டு ஹெலன் மறுபடியுமாக காங்கோ நாட்டுக்குத் திரும்பினார். டாக்டர் படிப்பை முடித்திருந்த ஜாண் மங்காடிமா, மருத்துவ மனையின் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டிருந்ததைக் கண்டு ஹெலன் மகிழ்ச்சியடைந்தார். ஒரு நற்செய்திப் பணி மருத்துவ மையத்தை உருவாக்கினார். (தொடர்ச்சி 4 ஆம் பக்கம்)

## ஆசையாய் தொடருகிறேன் (பிலி–3:12)

நான் அடைந்தாயிற்று அல்லது முற்றிலும் தேறினவனானேன் என்று எண்ணாமல் கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காக பிடிக்கப்பட்டேனோ? அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய் தொடருகிறேன்.

### 1.கிறிஸ்து இயேசுவினால் எதற்காக பிடிக்கப்பட்டேன்?

நம்முடைய கிறிஸ்துவானாவர் பவுலை எதற்காக பிடித்தார்? எதை செய்யலாம் என்பதற்காக அல்ல, அவர் சொன்னதையே செய்ய பிரித்தெடுத்தார்.

ஏன் பிடித்தார்? எதற்காக பிடிக்க வேண்டும்? யார் இந்த பவுல்?

பிலி–3:5,6 வசனங்கள் தெளிவுப்படுத்துகின்றன.

i. எட்டாம் நாளில் விருத்த சேதனம் செய்யப்பட்டவர்
ii. இஸ்ரவேல் வம்சத்தான்
iii. பென்யமீன் கோத்திரத்தான்
iv. எபிரேயரில் பிறந்த எபிரேயன்
v. நியாப்பிரமாணத்தின்படி பரிசேயன்
vi. பக்தி விருத்தியின்படி சபையை துன்பப்படுத்தினவன்
vii. நியாயப்பிரமாணத்தின் நீதியின் படி குற்றம் சாற்றப்படாதவன்

### I.நியாப்பிரமாணத்தின்படி பரிசேயன்...

பரிசேயர்கள் எப்படிபட்டவர்கள் வெளிப்புற அலங்காரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பவர்கள். தங்களை தாங்களே மேன்மை பாராட்டக்கூடியவர்கள். எல்லாரையும் விடவும் தங்களை பரிசுத்தவான் என்று நினைத்து மற்றவர்களை அற்பமாய் பார்க்ககூடியவர்கள். இப்படிப்பட்ட கூட்டத்திலிருந்து பிரித்தெடுத்து 1–கொரி–12:9 கிறிஸ்துவின் நிமித்தம் படுகிற பாடுகளையும், பலவீனங்களை குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன் என்று சொல்ல வைத்தார்.

### II.பக்திவைராக்கியத்தின் படி சபையை துன்பப்படுத்தினவன்.

சபையின் புருஷர்களையும், ஸ்திரீகளையும் அடிமைப்படுத்தினவன். மரணப்பரியந்தம் துன்பப்படுத்தினவன். ஸ்தேவானுடைய மரணத்திற்கு சம்மதித்தவன். மனுஷரைப்பிரியப்படுத்தும்படி மதத்தலைவர்களை பிரியப்படுத்தும்படி அந்த சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டதின் நிமித்தம் ஜனங்களை அடிமையாக்க வேண்டும், சிறைப்படுத்த வேண்டும் சென்றேனே? அதே இரட்சிப்பின் சுவிசேஷத்திற்காக அடிமைகளுக்கு அடிமையானேன் என்று சொல்லும்படி தேவன் பிரித்தெடுத்தார். 1–கொரி–9:19. நான் ஒன்றுக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படி என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன்.

அப்–21:13 இயேசுவின் சுவிசேஷத்திற்காகவும், அவருடைய நாமத்தன் நிமித்தம் கட்டப்படுவதற்கு மாத்திரம் அல்ல மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன் என்று சொல்ல பிரித்தெடுத்தார்.

## III. நியாயப்பிரமாணத்தின் படி குற்றம் சாட்டப்படாதவன்..

அப்–22:3 கமாலியேன் பாதத்தருகே அமர்ந்து வளர்ந்து முன்னோர்களுடைய (மோசே) கொடுத்த வேத பிரமாணத்தின்படி திட்டமாய் போதிக்கப்பட்டு சகலத்தை கற்றுத் தேர்ந்தவன். எல்லாம் எழுத்திலே இருக்கிறது, பேச்சிலே இருக்கிறது ஆனால் அதுவும் வாழ்க்கையிலே இல்லை.

1–கொரி–4:20 தேவனுடைய ராஜ்ஜியம் பேச்சிலே அல்ல. தேவ பெலத்திலே இருக்கிறது. பேச்சிலே பரிசுத்தம் வைராக்கியம் வேத வாசிப்பு ஜெபம் அன்பு சாட்சி தாழ்மை ஆனால் வாழ்க்கையிலே. தேவன் வார்த்தையினால் மாத்திரம் அல்ல. வாழ்க்கையினால் வாழ்ந்து சொல்ல தேவன் பவுலை பிடித்தார்.

## 2.நான் அடைந்தாயிற்று அல்லது முற்றிலும் தேறினவனானே என்று எண்ணாமல்:–

ஒரு வேளை பவுலைப் போல ஊழியம் செய்திருந்தால் நாம் என்ன செய்திருப்போம். பெரிய புஸ்தகமே நம்மை பற்றி எழுதியிருப்போம். பவுல் ஒரே வார்த்தையில் சொல்லுகிறார் அடையவும் இல்லை, தேறவும் இல்லை என்பதாக, என்னை எதற்காக தெரிந்து கொண்டாரோ இந்த உன்னதமான ஊழியத்திற்கு அழைத்தாரோ பிடித்தாரோ அதை நான் இன்னும் அடையவுமில்லை தேறவுமில்லை என்பதாக சொல்லுகிறார். ஆனால் அனைத்து தகுதியும் அவருக்கு இருந்தது. 13 நிருபங்கள் பல தேசங்களுக்கு பல்வேறு பாரம்பரிய ஜனங்கள் மத்தியிலே இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிக்க ஓடுகிறார்(ஓயாமால்) அப்பாடா போதும் பதவிக்கு, பொறுப்பிற்கு வந்து விட்டோம் என்பதோடு நில்லாமல் இன்னும் ஏதாவது இன்னும் யாரிடமாவது இன்னும் எங்காவது என்று நாளுக்கு நாள் தாகத்தோடு சுவிசேஷத்தை அறிவிக்க வாஞ்சையோடு சுற்றித்திரிந்தார். அதனால் மிஷனெரிகளாய் தங்களை அற்பனித்தவர்கள் மரணம் வரையிலும், ஆரம்பத்தில் இருந்த அதே உற்சாகத்தோடும் அர்ப்பணிப்போடும் ஊழியத்தை செய்ய முடிகிறது. (அடையவுமில்லை, தேறவுமில்லை) நான் யார் தெரியுமா? என் படிப்பு, வேலை, பதவி, ஜாதி, என்ன என்று தெரியுமா? என்னைப் போல யாராவது இருக்க முடியுமா என்று இப்படியே நாம் சொல்வோமானால் இயேசு கிறிஸ்துவை அடையவும் முடியாது. அறியவும் முடியாது.

இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தை செய்ய மனத்தாழ்மை மிக முக்கியம். பெருமையுள்ளவனுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். எல்லா பெருமையும் நஷ்டமென்று விட வேண்டும் அதுமாத்திரம் அல்ல குப்பையாகவும் என்ன வேண்டும்.

1–கொரி–15:19 இப்படியாக சொல்கிறார். அப்போஸ்தலர் எல்லாராலும் நான் சிறியவனாய் இருக்கிறேன் அப்போஸ்தலன் என்று பேர் பெறுவதற்கு கூட நான் பாத்திரன் இலல்லை என்று சொல்லுகிறார். பட்டப்படிப்பு படித்தவர் 1–13:12 நான் குறைந்த அறிவுள்ளவன் என்று தன்னை தாழ்த்தி தேவனை உயர்த்தி ஊழியம் செய்தார். அப்படியே மனத்தாழ்மையை தரித்துக்கொள்ள நம்மை அர்ப்பணிப்போம்.

(தொடர்ச்சி 8 ஆம் பக்கம்)

சகோதரிகள் பகுதி

## முன் குறிக்கப்பட்டவர்கள் பாதுகாக்கப்பட்டவர்கள்

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அனைவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள். இச் செய்தி மலர் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. தேவனுடைய நாமம் மகிமைப்படுவதாக.

"நான் மீதியாக வைக்கிறவர்களுக்கு மன்னிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" எரேமி-50:20

நம்முடைய கர்த்தர் மன்னிக்கிற தேவன். அவர் மன்னிக்கும் போது நம்முடைய பாவங்களை இனி நினையாமலிருப்பார். மேற்குக்கும், கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரம் அவர் நம்முடைய பாவங்களை அப்புறப்படுத்துவார். நம்முடைய அக்கிரமங்களையெல்லாம் நீக்கிப்போட்டார். அவருடைய இரக்கங்கள் பெரியவைகள். அவரது மனதுருக்கம் ஒரு போதும் மாறாதது. அவருடைய கிருபைகள் காலை தோறும் புதியதாயிருக்கிறது. அவருடைய உண்மை தலைமுறை தலைமுறையாக நிலைத்திருக்கிறது.

இஸ்ரவேல் மற்றும் யூதா ஜனங்கள் தேவனுக்குச் சொந்த ஜனமாயிருக்கின்றனர். ஆபிரகாம் மூலமாகக் கர்த்தர் அவர்களைத் தெரிந்து கொண்டார். பரிசுத்தமுள்ள தேவனாகிய அவருக்கு விரோதமாகப் பாவஞ்செய்த போதெல்லாம் அவர்களுடைய சத்துருக்களிடம் அவர்களை ஒப்புக்கொடுத்தார். அவர்களுடைய சத்துருக்களினால் ஒடுக்கப்படும்போது அவரை நோக்கிக் கூப்பிட்டனர். அவர் அவர்களுக்கு பதிலளித்து அவர்களுடைய அக்கிரமங்களையெல்லாம் மன்னித்தார். அவர்களை தமக்குச் சொந்தமாகத் தெரிந்து கொண்டபடியால் அவர்களுடைய பாவங்களை மன்னிப்பதாகவும், அவர்கள் அக்கிரமங்களை இனிமேல் நினைக்கப்போவதில்லை என்றும் அவர்களிடம் கூறினார். அவர் அவர்களை தமக்குச் சொந்தமாக்கி கொண்ட படியால் அவர்களுடைய பாவங்கள் முழுவதையும் மன்னிப்பதாக வாக்குப் பண்ணினார். இஸ்ரவேல் மற்றும் யூதாவின் ஜனங்களில் சிலர் தேவனுக்கு கீழ்படிந்திருந்தனர். எனவே அவர்களை கர்த்தர் தமக்குச் சொந்தமாயிருக்கும்படி பாதுகாத்துக்கொண்டார்.

இன்னும் அழைக்கப்பட்டவர்கள் அநேகர். தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ? சிலராயிருக்கின்றனர். தெரிந்து கொள்ளப்பட்ட சிலரிலும் தேவனுடைய பரிபூரண சித்தத்தைச் செய்கிறவர்களைத் தமக்காக அவர் பாதுகாத்து வைத்திருக்கிறார்.

அப்படி நாம் அழைக்கபட வேண்டுமா அவரால் தெரிந்து கொள்ளப்பட வேணடுமா?

பிலிப்பியர் 3:14 ல் இப்படியாக வாசிக்கிறோம் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன். என்று பிலிப்பியர் சபைக்கு அப்போஸ்தலனாகிய பவுல் எழுதகிறார்

தேவனுடைய அழைப்பிற்கு பாத்திராரக இருக்க நமக்கு கொடுக்கபட்ட இலக்கு என்ன என்பதை திர்மானிக்க வேண்டும் முதல் இலக்கு தேவனிடத்தில் அன்பாயிருக்கவேண்டியது அவசியம் பிரியமான சகோதரிகளே தேவனை நோக்கி பார்த்து அவர்மேல் அன்பாய் இருங்கள் தேவ அன்பினால் நீங்கள் நிரப்பப்பட்ட உங்களை தேவனிடத்தில் ஒப்பு கொடுங்கள். தேவனை இந்த உலகத்தைவிட உங்கள் உறவுகளை விட ஏன் ? உங்களை விட அதிகமாய் நேசியுங்கள் அப்பொழுது தேவனுடைய அன்பு உங்களுக்குள் இருக்கும் பயத்தை புறம்மே தள்ளும் . அன்பாக இருப்பது என்றால் என்ன? தேவனோடு பேச வேண்டும் அவருடைய பிரசன்னத்திற்கு காத்திருக்க வேண்டும் அவருக்கு பிரியமாக நடந்து கொள்ள வேண்டும் அப்பொழுது தேவன் உங்கள் அன்பு வைத்து அவருடைய அழைப்புக்கு பாத்திராக நம்மை தகுதிபடுத்துவார். சாதாரண மனிதன் உதாரணத்திற்கு நம்முடைய மேலதிகாரி என்று வைத்துக் கொள்வோம் அவரை திருப்த்தி படுத்த நாம் எவ்வளவோ காரியங்களை மேற்கொள்கிறோம் துரிதமாக பணிகளை செய்து அவரை கவர நினைக்கிறோம் , நம் ஆண்டவர் நம்மை உண்டாக்கியவர் ராஜாதி ராஜா அவரது அழைப்பை பெற அவர் மேல் அன்பு செலுத்தி அவருக்கு பிரியமாய் நடந்து அவரது அழைப்பை ஏற்றுகொள்வோம்

சங்கீ–59:1 "என் தேவனே என் சத்துருக்களுக்கு என்னைத் தப்புவியும்". நாமும் புத்தியுள்ள கன்னிகைகளைப் போலக் கர்த்தருடைய வருகைக்காக ஆவலுடன் காத்திருப்போம். கர்த்தரால் மன்னிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டவர்களாகிய நாமும் பரிசுத்தத்தின் ஒரு நிலைமையிலிருந்து மற்றொரு நிலைக்கு முன்னேறிச் செல்ல வேண்டும். நம்முடைய தலைகளை உயர்த்தி, மகிமையின் கிரீடத்தைப் பெறும்படி இலக்கை அடைகிறவர்களாயிருக்க வேண்டும். அவருடைய மகிமையுள்ள வருகையில் காணப்படுகிறவர்களாய் வாழ வேண்டும். தேவன் நம்மை தமக்காகத் தெரிந்து கொண்டிருக்கிறபடியால் அவருக்கு நன்றியுள்ளவர்களாய் இருப்போம்.

கர்த்தாவே, உமக்கு சொந்தமாய் எங்களைப் பாதுகாக்கிறபடியால் உமக்கு நன்றி. பாதுகாக்கப்பட்டவர்கள் மகிமைக்காகப் பரிசுத்தப்படுத்தப்படுகின்றனர். ஆமென்.

கிறிஸ்துவுக்குள்
அன்பு சகோதரி,
**எப்சிபா ஸ்டீபன்**

# சபையின் ஊழிய பொருப்பாளர்கள்



சகோ. எபிநேசர்
ஜெப ஊழியம்
50203472



சகோதரி . கீதா ஜெயகுமார்
விடுமுறை வேதாகம பள்ளி ஊழியம்
99379210



சகோ. எட்வர்ட் சந்தோஷ்
சபையின் பாடகர்க் குழு ஊழியம்
65069589



சகோ. ஆரோக்கிராஜ்
இணைய தள ஊழியம்
66159784



சகோ. பிஃரான்ங்ளின்
கேம்ப் ஊழியம்
97151339



சகோ. சுபின் சிங்
போக்குவரத்து ஊழியம்
65772762



சகோ. ஜான்ஸன்
மிஷனரி ஊழியம்
97610275



சகோ. ஐசக் துரை
செய்திமலர் ஊழியம்
66015503



சகோ. அந்தோணி
திக்கற்ற பிள்ளைகள் ஊழியம்
55124724

சகோ. ஸ்டீஃபன்
விதிமுறை கண்காணிப்பாளர்
65868048





சகோ. ஆரோக்கியதாஸ்
கணக்கு தணிக்கையாளர்
99870126

உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

செயற்குழு உறுப்பினர்கள்



சபை முதன்மை ஊழியர்

சகோ. ஜெயசேகர்

96646444

செயலாளர்



சகோ. இயேசு ரெத்தினம்

23924262 - 97545812



பொருளாளர்

சகோ. ஜெகநாதன்

66889535 - 98852812

பெண்கள் ஐக்கிய தலைவி



சகோதரி. எப்சிபா ஸ்டீஃபன்

67792009 - 56640551



வாலிப ஐக்கிய தலைவர்

சகோ. பிரசாத் சுந்தரேசன்

60781168

Church Website Address - ahmaditamilcongregation.org

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்

எதுவாக இருந்தாலும்

எங்களுக்கு தெரிவிக்கவும்

உங்களுக்காக ஜெபிக்க

ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only